2. விதி 110–ன்கீழ் அறிக்கை

பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க பிளாஸ்டிக் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்கும் வகையில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு 1–1–2019 ஆம் நாள் முதல் தடை விதித்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஜூன் 5, "உலக சுற்றுச்சூழல் தினம்." சமுதாயம் நலமாக வாழவும், வளமுள்ள நாடு உருவாகவும் இன்றியமையாததாக விளங்குவது சுற்றுச்சூழல். இத்தினத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் உறுதி எடுப்போம். சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு, சுற்றுச்சூழல் துறை மூலமாக புரட்சிகரமான திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றினார்கள். அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு தொடர்ந்து அதனைப் பின்பற்றி வருகிறது.*

முற்பகல் 11–20

மாண்புமிகு அம்மா அவர்கள், "பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஆய்வு செய்யும் வல்லுநர் குழு" என்ற சிறப்புக் குழுவினை அமைத்தார்கள். இந்த வல்லுநர் குழு ஒரு முறை பயன்படுத்தி, தூக்கி எறியக்கூடிய மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் குவளைகள் போன்ற பொருட்களைத் தடை செய்யவும், பாரம்பரியமாகப் பயன்படுத்தப்படும் வாழை இலைகள், பாக்குமட்டை தட்டுகள், தாமரை இலைகள் போன்றவற்றின் பயன்பாட்டினை ஊக்குவிக்கவும் ஆலோசனை வழங்கியது.

இவற்றில், அன்றாடம் மக்களுக்குத் தேவைப்படும் பால், தயிர், எண்ணெய், மருத்துவப் பொருட்களுக்கான உறைகள் போன்ற பொருட்களுக்கான பிளாஸ்டிக் உறைகளுக்கு மட்டும் விலக்களிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள்,நிலங்களில்தேங்கிவிடும்போது,நீர்நிலைகளைநோக்கிச் செல்லும் நீரின் போக்கு மாறி, நீர் தேங்கிவிடும் நிலை உருவாகிறது. மேலும், கழிவுநீர் செல்லும் பாதைகளிலும் இதன் பாதிப்புகள் அதிக அளவில் உள்ளன. இதனால் தண்ணீர் மாசடைகிறது. மேலும், மழைநீர் பூமியில் கசிந்து நிலத்தடியினை அடையாமல் போவதால், நிலத்தடி நீர்மட்டம் உயர்வதும் பாதிக்கப்படுகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தேங்கியிருக்கும் பிளாஸ்டிக் கழிவுகளில் மழைநீர் தேங்கும்போது, கொசு உற்பத்தியாகி, அதன்மூலம் மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் பரவுகின்றன. மேலும், மழைநீர்க் கால்வாய்களில் அடைப்புகள் ஏற்பட்டு, வெள்ளப்பெருக்கு ஏற்படவும் காரணமாகிவிடுகிறது. மண் வளமும் பாதிக்கப்படுகிறது.

தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் எரிக்கப்படும்போது, அதன்மூலம் வெளியாகும் நச்சு வாயுவின் மூலமாக மனிதன் மற்றும் உயிரினங்கள் சுவாசிக்கும் காற்றும் மாசடைகிறது.

உணவுப் பொருட்களுடன் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் பிற உணவுகளுடன் சேர்ந்து உண்ணும் நிலை ஏற்படுவதனால், கால்நடைகள் மற்றும் வன விலங்குகளின் உயிரிழப்புக்கும் பிளாஸ்டிக் பொருட்கள் காரணமாகிவிடுகின்றன.

மேலும், பிளாஸ்டிக் பொருட்கள் பல ஆண்டுகள் ஆனாலும், மக்காத தன்மை உடையதால், அவற்றை அழிப்பதோ, ஒழிப்பதோ இயலாத காரியம். இவ்வாறு நிலம், நீர், காற்று போன்ற பல்வேறு நிலைகளில் மாசு ஏற்பட்டு, மனித உயிருக்கும், சுகாதாரத்திற்கும் பிளாஸ்டிக் பொருட்கள் பெரும் தீங்கு விளைவிக்கக் காரணமாகிவிடுகின்றன. எனவே, இவற்றை அறவே தவிர்ப்பது இன்றைய சூழ்நிலையில் கட்டாயமாகிறது.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 5

மேற்படி பாதிப்புகளை கருத்தில்கொண்டும், இந்தத் தீங்கினை நம் எதிர்கால சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லக் கூடாது என்ற உயரிய நோக்கத்திலும், தமிழ்நாட்டில் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் பால், தயிர், எண்ணெய், மருத்துவப் பொருட்களுக்கான உறைகள் தவிர, தடிமன் வேறுபாடின்றி, இதர மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் தேநீர்/தண்ணீர்க் குவளைகள், தண்ணீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் உறிஞ்சு குழல் மற்றும் பிளாஸ்டிக் கைப் பைகள், பிளாஸ்டிக் கொடிகள் உள்ளிட்ட பொருட்களைத் தயாரித்தல், விற்பனை செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றை சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986—ன்கீழ், தடை செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முழுவதும் அவற்றைத் தடை செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொது மக்களும், வியாபாரிகளும் மேற்படி பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக, துணிப் பைகள், காகித உறைகள் போன்ற மக்கும் பொருட்களைப் பயன்படுத்த பழகிக்கொள்ள ஏதுவாக, மேற்படி தடைகளை உடனடியாக அமல்படுத்தாமல், 2019, ஜனவரி மாதம் 1 ஆம் தேதி முதல் அமல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டமான ‘மழைநீர் சேகரிப்புத் திட்டம்’ பொது மக்களின் ஒத்துழைப்போடும், பங்களிப்போடும் வெற்றிகரமாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு, நிலத்தடி நீர் பெரிய அளவில் செறிவூட்டப்பட்டது.

அதேபோன்று, உலக சுற்றுச்சூழல் தினமான இன்று, உங்கள் அனைவரின் ஒத்துழைப்போடும், பங்களிப்போடும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்த இருக்கும் ‘பிளாஸ்டிக் இல்லாத தமிழ்நாட்டை’ நம் எதிர்கால சந்ததியினருக்குப் பரிசளிப்போம் என்று கூறி, அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)